# கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி

## S.C.No.228/2009

2024 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 01 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. ராஜா (அ.சா.9) | தொழில் | : மருத்துவர் |
| த/பெ., க/பெ. | : திரு. மீனாட்சிசுந்தரம் | வயது | : 52 |
| கிராமம் | : மதுரை | இனம் | : ஆண் |
| தாலுகா | : மதுரை | நாள் | : 01.10.2024 |
| மாவட்டம் | : மதுரை | | |

1–வது எதிரி முன்னிலையாகியுள்ளார்.

<u>முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

நான் தற்போது மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 30.04.2004 அன்று பழனி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது பிற்பகல் 2.00 மணியளவில் செல்வம், வயது – 25, த/பெ. பாண்டி, மடத்துக்குளம் என்பவரை பழனி தாலுகா காவல் நிலைய தலைமைக் காவலர் திரு. எஸ்.பரமசிவம் என்பவர் குறிப்பாணை

எண்.42/ML/K1PS/04, Dated 30.04.2004 மூலம் அழைத்து வந்தார். செல்வம் தன்னை அடையாளம் தெரியாத நான்கு நபர்கள் 30.04.2004 அன்று காலை சுமார் 04.45 மணியளவில் பெத்தநாயக்கன்பட்டி, வி.கே.மில்ஸ் அருகில் கையால் தாக்கியதாகக் கூறி சிகிச்சைக்காக வந்தார். அவரை பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு வெளிக்காயங்கள் ஏதும் இல்லை. நெஞ்சின் இடது பகுதியிலும், முதுகுப் பகுதியிலும், இடது தொடையிலும் வலி இருந்ததாகக் கூறினார். அவருக்கு வெளிநோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு சாதாரண காயங்கள் என்று காயச்சான்றுடன் கூடிய விபத்துப் பதிவேடு வழங்கினேன். மேற்படி காயச்சான்றுடன் கூடிய விபத்துப்பதிவேடு அ.சா.ஆ.11. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**2–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நோயாளி என்னிடம் தன்னை தாக்கியவர்களின் பெயரை குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். கொடுங்காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். நோயாளிக்கு ரத்தக்காயங்கள் எதுவும் இல்லை. அவருக்கு ஏற்பட்டதாகச் சொல்லப்படும் வலியானது கரடு முரடான தரைப்பகுதியில் விழுந்துவிடுவதால் கூட ஏற்படும் என்றால் சரிதான்.

**1–ம் எதிரி தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணை தக்கவைத்துக்கொள்ளப்படுகிறது.**

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2024.10.01 17:02:10 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.